[1972 மார்ச் 27

*734 வினு—திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை–கூடலூர் மார்க்கமாக சீஃபோர்த் எல்லமலேக்கு ஓடிக்கொண்டிருந்த அரசுத்துறை பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) கூடலூரிலிருந்து "சீஃபோர்த்" (Sea Forth) வழியாக எல்லமலேக்குச் செல்லும் சாலே மிக மோசமாகவுள்ளது. மேலும், அங்கு போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தும் பயணிகள் எண்ணிக்கையும் மிகமிகக் குறைவாகும்.

Traffic Survey in Madras.

*735. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state whether any traffic survey in Madras City had been undertaken on or about the 9th August 1971 by the Highways and Police Departments jointly?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

THIRU N. DENNIS: Sir, may I know the places having larger transport problems in the Madras City?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலேவரவர்களே, அண்ணு சாலேயிலும், பூந்தமல்லி நெடுஞ்சாலேயிலும் இருக்கக்கூடிய போக்கு வரத்து மிகவும் நெரிசலுடையதாக இருக்கின்றன. உதாரணமாக, போக்குவரத்து அதிகமாக உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலேயில் கிட்டத்தட்ட காலே 6,380 வண்டிகளும், மாலேயில் 7,434 வண்டி களும் போகின்றன. அதைப்போன்று மவுண்டு ரோடில் காலேயில் 6,255 வண்டிகளும், மாலேயில் 6,750 வண்டிகளும் போகின்றன. ஆகவே, மிக விரைவாகப் போகக்கூடிய வண்டிகள் கூட 20, 22 கிலோ மீட்டர் வேகத்தில்தான் செல்லமுடிகின்றன. எனவே, போக்கு வரத்து நெரிசலேக் குறைப்பதற்காக சாலேகளில் பிளே ஓவர் அமைக் கவும், சாலேகளே அகலப்படுத்துவதற்கும் ஒரு சர்வே நடத்தப் பட்டது.